**கலிகமுவ பிரதேச சபை**

**கேகாலை மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மே 14 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 யூலை 24 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கலிகமுவ பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கலிகமுவ, பட்டுவத்த மற்றும் பிட்டகல்தெனிய நூலகங்களில் 154 புத்தகங்களின் பற்றாக்குறைக்குரிய ரூபா 17,090 பெறுமதி நூலகப் புத்தகக் கணக்கிலும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கிலும் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் பொருள் மெய்மையாய்வு சிபாரிசின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது அகற்றப்பட்ட ரூபா 256,626 தொகையான

தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி, மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கில் சீராக்கம் செய்யப்படாது திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டமையினால் பங்களிப்புக் கணக்கின் மீதி அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) காணிக் கூறிடல் திட்டம் அங்கீகரிக்கப்படும் போது, சபைக்கு பெறப்பட்ட 44 பேர்ச் இனையுடைய பட்டுவத்த திக்ஹிதவத்த காணியின் பெறுமதியான ரூபா 100,000 தொகை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிலையான சொத்துப் பதிவேட்டில் காண்பிக்கப்படுகின்ற 09 ஏக்கர் 02 ½ றூட் இனையுடைய 09 காணிப் பகுதிகளின் பெறுமதி கணிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டில் சபையின் 03 நூலகங்களுக்காக கிடைக்கப்பெற்ற நன்கொடைப் புத்தகங்களின் பெறுமதியான ரூபா 107,182 தொகை நன்கொடையாக கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக நிலையான சொத்துக்களின் பெறுமதி அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணம் பதவியணியினர் படிகள் முறையே ரூபா 33,825 மற்றும் ரூபா 48,625 என்பன கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்படாமையின் காரணமாக ஆண்டின் செலவினம் ரூபா 82,450 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) அலுவலக உத்தியோகத்தரின் பொறுப்பில் காணப்பட்ட ரூபா 109,280 தொகையான ஏனைய உபகரணங்களின் பெறுமதி தொடர்ச்சியாக திரண்ட நிதியத்தில் வரவு வைக்கப்பட்டமையினால் ஆண்டின் சொத்துக்களின் பெறுமதி அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

மீளாய்வாண்டின் இறுதியில் மெய்மையாய்வு அறிக்கைகளின் பிரகாரம் நூலகப் புத்தகங்களின் மீதி ரூபா 2,695,352 ஆகவும் பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் மீதி ரூபா 2,758,710 ஆகவும் இருந்தமையால் வேறுபாடு ரூபா 63,258 ஆகக் காணப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) 2014 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த வேலைகளுக்கான முற்பணம் ரூபா 200,000 தொகை மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடகாலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 704,444 ஆகும்.

### 1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1946 இன் 12 ஆம் இலக்க வினோத வரி கட்டளைச் சட்டம் | வினோதவரிகள் அறவீடு செய்யும் போது சபை அனுமதித்த முன்மொழிவொன்றை விடயப் பொறுப்பு அமைச்சர் அங்கீகரித்து வர்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் மாத்திரம் வினோதவரி அறவிடப்பட முடியுமான போதிலும் 2014 ஆம் அண்டின் போது ரூபா 91,750 தொகை அறவிடல் தொடர்பாக மேற்கூறப்பட்ட பிரமாணம் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக்கட்டண (விஷேட ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டம் | ஒவ்வொரு காலாண்டிற்குமுரிய முத்திரைத் தீர்வைத் தொகை, அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2010 ஆம் ஆண்டு முதல் 2014 திசெம்பர் 31 வரையான காலத்தில் ஊழியர் |

| | |
|---|---|
| | சம்பளங்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 21,500 தொகையான முத்திரை வரி 2015 வரை அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை |

(இ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை

| | |
|---|---|
| நிதிப்பிரமாணம் 396(ஈ) | 06 மாதகாலத்தை விஞ்சிய ரூபா 53,840 தொகையான காலவதியான 23 காசோலைகள் தொடர்பாக உரிய பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| நிதிப்பிரமாணம் 571 | ரூபா 596,846 கூட்டுத்தொகையான காலவதியான 101 வைப்பு மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவு

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 8,148,969 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,675,555 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 6,473,414 அதிகரிப்பொன்றைக் காண்பித்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா 6,473,414 தொகையான அதிகரிப்பிற்கு 05 வருமான விடயங்களில் அதிகரிப்பும் 04 செலவின விடயங்களில் குறைவும் பிரமானமாகத் தாக்கமளித்திருந்தன.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 வருமாக சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரினால் மீளாய்வாண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மூலம் | 2014.01.01 இல் நிலுவை | 2014.12.31 இல் நிலுவையில் அறவீடு | 2014 ஆம் ஆண்டில் பற்றுச்சீட்டிடல் | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் அறவீடு | 2014.12.31 இல் நிலுவை | | மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 2014.01.01 இல் காணப்பட்டமீதி | ஆண்டின் பற்றுச்சீட்டிடல்களில் நிலுவை | |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | ஆதனவரியும் வரியும் | 521,859 | 333,329 | 2,385,000 | 2,065,510 | 188,530 | 319,490 | 508.019 |
| ii. | வாடகை | 7,500 | 2,250 | 3,566,000 | 1,685,594 | 5,250 | 1,880,405 | 1,885,655 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 52,050 | 2,200 | 727,175 | 748,608 | 25,700 | (21,433) | 4,267 |
| iv | ஏனைய வருமானம் | - | - | 2,332,000 | 3,176,461 | - | (844,461) | (844,461) |

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காண்பிக்கப்பட்டுள்ள நிலுவை வருமானமீதி கணக்கு அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்ட நிலுவை மீதியுடன் இணங்கியிருக்கவில்லை.

### 2.3.2 ஆதனவரி

நீண்ட காலம் முதல் ஆதனவரி செலுத்தாதிருந்த வரியிறுப்பாளர்கள் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவை வரியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய பணம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 680,084 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 9,310,211 |
| | | 9,990,295 |

### 2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

2013 மற்றும 2014 ஆம் ஆண்டுகளுக்கான சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்ற 08 மர ஆலைகள், 09 தச்சு வேலைகள், 02 தளபாட உற்பத்தி நிறுவனங்கள், செங்கல் மற்றும் வெதுப்பகம் மற்றும் கொங்கிரீட் கல் வேலைத்தளங்களுக்காக அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா 22,000 தொகையினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 இறைச்சிக்கடை வாடகை

2014 ஆம் ஆண்டிற்காக கொட்டியாக்கும்புர மாட்டிறைச்சிக் கடையை வாடகைக்கு வழங்குவதற்குரிய உடன்படிக்கை இலக்கம் 03 இன் நிபந்தனையின் பிரகாரம் மாதாந்த வாடகைப் பணம் மற்றும் தாமத தண்டப்பணம் என்பன மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தாதிருப்பின் உடன்படிக்கை இரத்துச் செய்யப்படுவதாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் 2014 ஆகஸ்ட் மாதம் முதல் வாடகைப் பணம் செலுத்தாதிருந்த போதிலும் உடன்படிக்கை இரத்துச் செய்யப்படாது திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் வியாபாரத்தை நடாத்திச் செல்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டமையால் ரூபா 525,148 நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

(அ) சப்ரகமுவ மாகாண சபையின் மூலம் பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட 10 வாகனங்களை சபையின் பெயரில் கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உறுப்பினர்களுக்கு ரூபா 221,428 பெறுமதியான 200 கொடிக் கம்பங்களை முறையாக விநியோகிக்கும் திட்டத்திற்கு புறம்பாக வழங்கப்பட்டிருந்தது.

(இ) 2014 நவம்பர் 17 ஆந் திகதி சபைக்குக் கிடைத்த ரூபா 531,428 பெறுமதியான 480 கொடிக் கம்பங்களுக்கிடையே ரூபா 34,321 பெறுமதியான 31 கொடிக் கம்பங்கள் சபையிடம் காணப்படவில்லை.

### 3.2 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

சபைக்குரிய வங்கிக் கணக்கொன்றில் ரூபா 46,582 காசு மீதியொன்று 2013 ஆம் ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டது.

### 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2013 ஆம் ஆண்டின் போது சபையின் சந்தை வளவில் கட்டிடத்தை நவீனமயப்படுத்துவதற்காக ரூபா 495,467 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்தக் கட்டிடம் 2014 ஆம் ஆண்டின் போது உடைத்து அகற்றப்பட்டிருந்தது.

### 3.4 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் பிரதேச சபைகள் நிதி, நிர்வாக விதிக் கோவையின் 5(7) இன் பிரகாரம் நிதி மற்றும் களஞ்சியம் தொடர்பாக போதியளவான உள்ளகக் கணக்காய்வை நடாத்திச் செல்லல் தலைவரின் செயற்பணியாக இருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிர்வாகம்

(ஈ) சொத்தக்கள் முகாமைத்துவம்

(உ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு